**2015 நொவெம்பர் 22ஆந் திகதி , யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஐ.நா.நிரந்தரப் பிரதிநிதி, தூதுவர் சமந்தா பவர்(Ambassador Samantha Power) நிகழ்த்திய உரை**

வணக்கம்.! என்னைப்பற்றி அறிமுகம் செய்த அமைச்சர் குருகுல ராஜாவிற்கு எனது நன்றிகள். இந்த உன்னதமான கல்லூரிக்கு வருகை தருமாறு என்னை அழைத்தமையையிட்டு, கல்லூரி அதிபர் அஸ்ரப் அவர்களுக்கு நன்றி. இன்று எம்முடன் இங்கு வருகை தந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இக் கல்லூரிக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும் நன்றி.

ஒஸ்மானியா கல்லூரிக்கு வருகை தரக்கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இது எனக்கு வழங்கப்பட்ட ஒரு கௌரவமாகும். பல்லாண்டுகளாக, யாழ்.முஸ்லிம் சமூகத்தின், இதயம் போன்ற, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமே இது. வெள்ளப்பெருக்குக் காரணமாக வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, இந்த வாரத்தில், ஒஸ்மானியா கல்லூரி நிழல் கொடுத்து உதவியது என நான் அறிந்தேன். அதிக அளவில் பெண்கள், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு இங்குள்ள வகுப்பறைகளில், பாதுகாப்பு வழங்கியதாக நான் அறிந்தேன். அவர்களில் பல குடும்பங்கள் இன்றும் இங்கே தங்கி இருக்கின்றனர். எங்களின் இதயங்கள் உங்களோடு இருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இக் குடும்பங்கள்மீது நீங்கள் காட்டிய கரிசனை, எங்கள் உள்ளங்களை நெகிழவைக்கின்றது. இக் குடும்பங்களுக்கு நிழல் தருவதன்மூலம், உங்கள் பொறுப்பை நீங்கள் நிறைவேற்றி உள்ளீர்கள். ஐக்கியப்பட்ட சமூகம் தடைகளை வெற்றிகொள்ளக்கூடிய வழி முறையை இதன்மூலம் நீங்கள் எடுத்துக் கூறி இருக்கிறீர்கள்.

ஒஸ்மானியா கல்லூரி எவ்வளவு தூரம் முன்னேறி உள்ளது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. நாம் எதிர்காலத்தை நினைவுகூர்வதற்கே இங்கு வருகை தந்துள்ளோம். ஆனால், இறந்த காலத்தை நாம் மறந்துவிட முடியாது. குறிப்பாக இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர், முஸ்லிம் சமூகத்தை ஒன்றுகூடுமாறும், தமது வீடுகளைக் கைவிட்டு இங்கிருந்து வெளியேறுமாறும், ஆணையிடப்பட்டது. ‘‘ஒரு இனம் விரட்டி அடிக்கப்பட்டது’’ என்ற சொற்றொடர் பாவனைக்கு வரமுன்னர் யாழ்.முஸ்லிம் மக்கள் இதனை அனுபவித்துள்ளனர். அதன் பின்னர், கடந்துபோன வருடங்கள் மிக இருண்ட காலகட்டமாகும். இத்தகைய கட்டடங்கள் மாத்திரம் அழிக்கப்படவில்லை. மக்களும், இந்த அழிவை எதிர்நோக்க நோக்க வேண்டியிருந்தது.. பல கஷ்டங்களை அவர்கள் அனுபவிக்க நேர்ந்தது. இன்றும் அதன் தாக்கத்தை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஒஸ்மானியா போன்ற பாடசாலைகளுக்குச் செல்ல, எல்லோருக்கும் வசதிகள் கிடைக்காத காரணத்தினால், இளைஞர் சமூகம் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வசதிகளையே பெற முடிந்தது. ஒட்டுமொத்த இலங்கையும், வடமாகாணமும், யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களைப் போலவே இச் சமூகமும் தொடர்ந்தும் மீள கட்டியெழுப்பப்பட்டும் இயல்பு நிலையை நோக்கியும் நகர்ந்து வருகின்றனர் என்பதை நான் அறிவேன்.

ஜனாதிபதி ஒபாமாவினி சார்பில், உங்கள் நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நீண்டகால மீள் உருவாக்க நடவடிக்கைகளில், பங்குபற்றுவதற்கே நான் உங்களுடன் இணைந்துள்ளேன். அதேசமயம், பல்வேறு சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நீண்ட பயணத்தில் உங்களுக்கு உதவும்

வகையில், ஜனாதிபதி ஒபாமாவும், அமெரிக்க மக்களும் தம்மை அர்ப்பணித்துள்ளனர். இந் நடவடிக்கைகளின்போது ஒஸ்மானியா போன்ற பாடசாலைகளுக்கு உதவுவதைவிட வேறு நல்ல வழிமுறை கிடையாது. நீங்கள் இப் பிள்ளைகளுக்கு வழங்கும் கல்வி காரணமாக, அவர்களுக்கு மென்மேலும் வாய்ப்புக்கள் ஏற்படுவதோடு, பிரகாசமான எதிர்காலத்திற்கும் அவர்கள் உரிமை கொண்டாடக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறாக, மோதலில் இருந்து சமாதானத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின்போது, அதற்கு ஒத்துழைப்பு வழங்க, இப் பிரபலம்வாய்ந்த பாடசாலைகள் ஆற்றல் கொண்டிருக்கும். இலங்கையின் அனைத்து இளைஞர்களுக்கும், இதன்மூலம் கல்வி வசதிகள் வழங்குவதை உறுதிசெய்ய முடியும். இதனூடாக, மிக அதிக அளவில் சமவாய்ப்பை உறுதிப்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் என்ன நடந்தது என்பதை நன்கு புரிந்துகொள்வதற்கும் ஒவ்வொருவருக்கும் ஆற்றல் கிடைக்கும். பகைமைக்கும், பிளவுகளுக்கும் எதிர்காலத்தில் சந்தர்ப்பம் இல்லையென்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த இலக்கை நோக்கிச் செல்லும் பயணத்தில், ஐக்கிய அமெரிக்கா உங்களோடு துணை நிற்கும் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். 2008 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மோதல் காரணமாக பாதிப்புக்கு உள்ளான, பாடசாலைகளுக்கு ஐக்கிய அமெரிக்கா உதவி செய்துள்ளது. இப் பாடசாலைகளில் வருடம் பூராவும் கல்வியை வழங்குவதற்கும், அதிக அளவு மாணவர்களை இணைத்துக்கொள்ளக் கூடிய வகையில், புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும், வசதிகளை மேம்படுத்துவதற்கும் நாம் உதவி வழங்கி உள்ளோம்.

நாம் இக் கல்லூரிக்கு புதியதோர் அங்கத்தை சேர்க்கின்றோம். ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் இருந்து கிடைத்த 450,000 டொலர்களை பயன்படுத்தி, புதிய ஆய்வுகூடம் ஒன்றை நிறுவுவதற்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்கும், ஆண்பெண் பிள்ளைகளுக்கு மலசலகூடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் உதவியுள்ளோம். மழைநீரை சேகரிப்பதற்கான, ஒரு தொட்டியை அமைப்பதிலும் ஒஸ்மானியா கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக முன்னேற்றமடைந்த கல்வியை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பெறுவதற்கு வாய்புக் கிட்டியுள்ளது.

இந்த மாணவர்கள் மத்தியில் ஒரு பகுதியினர் மிகுந்த ஆர்வத்துடன் இங்கு கல்வி கற்பதையும் நான் அறிவேன். உங்களுக்கு உதவ முடிந்தமை குறித்து ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மிக மகிழ்ச்சியடைகிறது (கைதட்டல்). உங்கள் நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் நீங்களே. வகைப்பொறுப்புக் கூறும் அரசு செயற்பாடு கொண்ட சிவில் சமூகம் நிலவும் ஜனநாயக ஒழுங்குடன் கூடிய சுபீட்சமான நாடாக இலங்கையை உருவாக்குவதற்கு நீங்கள் பங்களிப்புச் செய்வதை நாங்கள் அறிவோம். இதற்கென நீங்கள் உங்கள் வீடுகளில் உங்கள் வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டும் (சபையோர் சிரிக்கின்றனர்). எனவே, நான் இந்த மேடையில் இருந்து இறங்குவதற்கு முன்னர், நீங்கள் நன்கு வீட்டு வேலைகளைச் செய்வதாக உறுதியளிக்க வேண்டும். மிக நன்றி. (கைதட்டல்). உங்கள் அனைவருக்கும் மிக நன்றி. உங்களோடு இணைந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு வழங்கப்பட்ட ஒரு கௌரவமாகும். அதேநேரம் எனது மகிழ்ச்சிக்கும் அது காரணமாக அமைகிறது. நன்றி.